*1995 மார்ச் 29*]

**154—**

**சங்ககிரி தொகுதியில் விசைத்தறி தொழிற்பேட்டை அமைத்தல்**

***36665 டாக்டர் வெ. சரோஜா:**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சங்ககிரி ஒன்றியம், மல்லசமுத்திரம் ஒன்றியம் ஆகிய இடங்களில் ஒரு விசைத்தறித் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?*

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) : எந்தச் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆகவே இவ்வினாவிற்கு இடமில்லை.*

**டாக்டர் வெ. சரோஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் சார்பில் வைத்த அனைத்துக் கோரிக்கைகளையும் அரைநொடிப் பொழுதில் நிறைவேற்றி நெசவாளர் நெஞ்சத்தில் நீங்கா இடம்பெற்றுள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் புதிய விசைத்தறி பணி வசதி நிலையங்களை நிறுவுவதற்கும் விசைத்தறி நிலையங்களுக்குச் சிறப்பான முறையில் ஆதரவும் பணி வசதியும் அளிப்பதற்காக பவர்லூம் ரிஜிஸ்ட்ரேஷன் ஃபண்ட் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிகிறேன். அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? அந்த நிதியைக் கொண்டு எனது தொகுதியில் விசைத்தறி தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி ஒன்றியம், மல்ல சமுத்திரம் ஒன்றியம் ஆகிய இடங்களில் விசைத்தறி தொழிற்பேட்டை அமைக்க கேட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விசைத்தறி அங்கே அமைக்க இயலாது என்று சொன்னதற்குக் காரணம் சங்ககிரி ஒன்றியத்தைச்

சேர்ந்த அச்சிராமணி கிராமம், தேவூர் கிராமம், கோவேரிப்பட்டினம் கிராமம், மோரூர் கிராமம், கத்தேரி கிராமம் மற்றும் புன்னக்கவுண்டம்பட்டி கிராமம் ஆகிய கிராமங்களில் குறைந்த அளவில் விசைத்தறியாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஓரிரு விசைத்தறிகளை தமது வீடுகளில் வைத்து பகுதி நேரப் பணியாக அதை மேற்கொண்டு வருகிறார்கள். மேற்படி கிராமங்களிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் முழுமையாக அருகிலுள்ள ஸ்ரீ ஓம் காளியம்மன் மற்றும் ஸ்ரீ ராஜகணபதி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயனடைந்து வருகின்ற காரணத்தால் தனியாக ஒரு விசைத்தறி தொழிற்பேட்டை அமைக்க அங்கே அவசியம் இல்லை என்பதை எடுத்துக் கூறுகிறேன். அதேபோல் மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் மாமுண்டி, வையப்பமலை, சுப்பையாபுரம், பாலமேடு, பாலக்காடு போன்ற பகுதிகளில் உள்ளவர்களில் பெரும்பாலோர் விவசாயத் தொழில் மற்றும் கைத்தறி நெசவு தொழில் மற்றும் இதர கூலி தொழில்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்கள் அருகிலுள்ள மல்லசமுத்திரம் தியாகி குமரன், வெங்கடேசபுரி, வ.உ.சி. மண்டி ஆகிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து கைத்தறி நெசவுத் தொழிலை இப்போது மேற்கொண்டு செய்து வருகிறார்கள். இந்த ஒன்றியத்தில் குறிப்பாக மல்லசமுத்திரம், காளிப்பட்டி ஆகிய பகுதிகளிலுள்ள விசைத்தறியாளர்கள் தங்களது பொறுப்பில் விசைத்தறித் தொழிலை முழு நேரப் பணியாக மேற்கொண்டு வருவதால் ஒரு தனி விசைத்தறி தொழிற்பேட்டை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. தமிழகத்தில் இதற்கென்று தனி நிதி இல்லை. வருகின்ற நிதியை விசைத்தறி நிறுவிய பின்னர் மத்திய அரசு கெஜட் வெளியிட்டபடி அதனுடைய தகவலுக்கு ஏற்ப அறிக்கையைப் பெற்று அதனை மாநில அரசின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலருக்கு அனுப்பி ஒப்புதல் பெற்று அந்தத் தறிகளுக்கு நிதி உதவியை அளிக்கிறது.

**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ஒருங்கிணைந்த கைத்தறி கிராம மேம்பாட்டுத் திட்டம் (Integrated Handloom Village Development Scheme) தொழில் கூடத்துடன் இணைந்த வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம்; வறுமையில் வாடும் நெசவாளர்களுக்கு உதவித் தொகை திட்டம்; குழும ஆயுள் காப்பீட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களை உள்ளடக்கிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் 20-க்கு மேற்பட்ட தொழில் முனைவோர்கள் சங்ககிரி

*1995 மார்ச் 29*]

ஒன்றியத்திலிருந்து தொழில்பேட்டை அமைக்க முன்வந்திருக்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அனைத்துச் சலுகைகளும் அளித்து தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை அமைக்க வந்தால் கைத்தறி நெசவாளர்களாக இருந்தால் அவர்களுக்குச் சங்கங்கள் இருக்கின்றன. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதற்கு என்ன செய்யலாம் என்பதைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 155,* செல்வி கோ. *மல்லிகா, மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.*

**155—**

**சேத்தியாதோப்பில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**17469*—**செல்வி கோ. மல்லிகா:**

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேத்தியாதோப்பில் வாழும் முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) நிலம் கையகப்படுத்தப்பட்டதும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.